DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No. 114/2024
Deposition of Witness for : PW 1

| Name. | திரு. சங்கர் |
|---|---|
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 04.08.2025

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1) நான் தற்பொழுது சூனாம்பேடு கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். கடந்த 2023ம் வருடம் நான் முதலியார் குப்பம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபொழுது கடந்த 4.6.2023 ம் நான் முதலியாகர் குப்பம் அலுவலகத்தில் இருந்தபொழுது மதியம் 2 மணி அளவில் செய்யூர் காவல் நிலையததைச் சேரந்த ஒரு காவலர் என்னிடம் வந்து மதுவிலக்கு கண்காணிப்பு சம்மந்தமாக பெண் ஒருவரை ஓதியூர் முந்திரி தோப்பு அருகே பிடிக்க முயன்றதாகவும், அவர் அங்கிருந்த தப்பி சென்றுவிட்டதாகவும் அவர் நின்றிருந்த இடத்தைச் சோதனை செய்தவதற்கு என்னை உடன் வருமாறு அழைத்தார்கள் நானும், என்னுடைய கிராம உதவியாளர் ராஜ்குமார் என்பவரும் அந்த இடத்திற்கு சென்றோம். அந்த இடத்தை 3, 4 காவலர்கள் தோண்டினார்கள். அதில் 3 வெள்ளை நிற கேன்கள் ஏதோ ஒரு திரவத்துடன் இருந்தது. அதை போலிசார் எடுத்துச் சென்றார்கள். பின்னர் என்னிடம் அது சம்மந்தமாக வழக்கு பதிந்ததாக கூறினார்கள். 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை 6.6.2023 அன்று செய்யூர் காவல் நிலையத்தில் ஆய்வாளர்

முன்னிலையில் போட்டேன். அதில் உள்ள விவரத்தை நான் படித்துப் பார்த்தேன். தற்பொழுது ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையதுதான். அவற்றை நான் காவல் நிலையத்தில் வைத்து ஆய்வாளருக்கு போட்டுக் கொடுத்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.த.சா.ஆ.1 முதல் 3**. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள அந்த பெண் ஓதியூர் கிராமத்தைச் சேரந்த பவானி. நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே போலிசார் அங்கிருந்த சாராயக் கேன்களை வெளியே எடுத்துவிட்டனர் என்றால் இல்லை, நான் சென்ற பின்தான் எடுத்தார்கள். 6.6.2023 அன்று செய்யூர் காவல் நிலைய ஆய்வாளர் என்னை போனில் தொடர்பு கொண்டு எதிரி பவானியை கைது செய்து விட்டதாகவும், அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டியும் என்னை அழைத்தார் என்று சொன்னால் ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தில் பார்வை மகசரில் கையொப்பமிடுவதற்காகத்தான் சென்றேன். காவல் நிலையத்தில் பவானி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் காவல் நியைம் சென்ற பொபது காவல் ஆய்வாளர் பவானியை அழைத்துச் கொண்டு சம்பவ இடம் சென்றேன் என்றாலும், நான் உடன் சென்றோம் என்றாலும் பவானி என்னுடன் வரவில்லை. நாங்கள் மட்டும் சென்று கேன்களை எடுத்தோம். அந்த இடத்தில் தான் காவல் ஆய்வாளர் மகசரில் என்னிடம் கையொப்பம் பெற்றார் என்றால் இல்லை. போலிஸ் விாசரணையில் உண்மை விவரங்கள் சொல்லி தற்பொழுது பிறழ்ந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) 4.6.2023 அன்று போலிசார் என்னை அழைத்ததற்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. 6.6.2023 அன்று என்னை காவல் நிலையம் வரச்சொசால்லி அழைப்பாணை எதுவும் அளிக்கவில்லை. 6.6.2023 அன்று நான் காவல் ஆய்வாளருடன் சென்ற இடம் யாருக்கு சொந்தமானது என்றால் பவானிக்கு சொந்தமானது. அதற்கான ஆவணங்களை நான் போலிசாரிடம் சமர்ப்பிக்கவில்லை. எக்கு சம்பவம் எதுவும் தெரியாது என்றாலும், கிராம நிர்வாக அலுவலர் என்பவதால் போலிசாருக்க பவ்வியப்பட்டு அவர்கள் ஏற்கனவே தயார் செய்த ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.